# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# சென்னை – 600 025.

## இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
## நான்காம் பருவம்

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2023**
**P104 காப்பியங்களும் சங்க இலக்கியமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண் . பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும் . ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும் . விடை ஒன்றிற் கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும் . ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக** **(15x1=15)**

1. பாவிகம் என்பது யாது?
2. சேக்கிழார் ஆதரித்த மன்னன் யார்?
3. இராமன் வனவாசம் செய்யத் தொடங்கும் போது முதலில் அறிமுகமானவன் யார் ?
4. வில்லிபாரதத்தில் உள்ள பருவங்கள் எத்தனை?
5. பாரதிதாசன் படைத்த மூன்று காவியங்களைக் குறிப்பிடுக.
6. ஐம்பெரும் காப்பியங்களை எழுதுக?
7. சமண சமயம் சார்ந்த காப்பியங்கள் இரண்டினைக் கூறுக .
8. கண்ணதாசன் எழுதிய மூன்று இலக்கியங்களைக் குறிப்பிடுக.
9. ஏறுதழுவல் என்றால் என்ன?
10. மலையைக் குறிக்க பயன்படும் வேறு சொற்கள் யாவை?
11. யாருக்குத் தமிழின் பெருமையை எடுத்துரைக்க குறிஞ்சிப்பாட்டு பாடப்பட்டுள்ளது?
12. தலைவியின் கூந்தல் மணம் பற்றித் தலைவன் யாரிடம் கேட்கிறான்?
13. 'நோம் என் நெஞ்சே' என்ற பாடலைப் பாடியவர் யார்?
14. 'சிற்றில்' என்றால் என்ன?
15. 'கைக்கிளை' என்பதன் பொருள் யாது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. காப்பிய மரபுகள் சிலவற்றைக் கூறுக.
2. இரட்டைக் காப்பியங்கள் யாவை? அவ்வாறு வழங்க காரணங்களை எழுதுக.
3. விமலை பந்தாடும் திறன் பற்றி எழுதுக.
4. வீரத்தாயில் கல்வியின் சிறப்பு எவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது?
5. முச்சங்கங்கள் எங்கெங்கு இருந்தன?
6. இளமை தீர்திறம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
7. 'புண்ணுமிழ் குருதி' விளக்குக.
8. 'குறிஞ்சியும் வெட்சியும்' பொருந்துமாற்றை விளக்குக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடைதருக. (3x15=45)**

1. (அ) கண்ணப்ப நாயனாரின் பக்திச் சிறப்பை எடுத்துரைக்க.

   (அல்லது)

   (ஆ) மகாபாரதம் கூறும் கிருஷ்ணன் தூதுவின் சிறப்பினை விளக்குக.

2. (அ) பாரதியாரின் பாஞ்சாலி சபதத்தின் காப்பியப் பொருண்மையை விளக்குக.

   (அல்லது)

   (ஆ) தொண்டைமானின் ஆட்சி சிறப்பைப் பெரும்பாணாற்றுப்படை வழி புலப்படுத்துக.

3. (அ)முல்லைத்திணைப் பாடல்களில் முப்பொருள்களின் சிறப்பை இலக்கியங்களில் வழி விவரிக்க.

   (அல்லது)

   (ஆ) மன்னர் – புலவர் உறவின் தன்மைகளைப் புறநானூற்றுப் பாடல்கள் வழி ஆராய்க .

****